02.12.2025

அ.வ.எண். 146/2018

வா.சா.3 – பாலசுப்பிரமணியம், த/பெ. பழனியப்பன்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 02.12.2025 is accordance with the provision of Act X of 3331

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நானும் என் தகப்பனாரும் போஜராஜனுக்கு 25.03.1996 ம் தேதியில் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். நான், கோவை ராமநாதபுரத்தில் குடியிருக்கிறேன். நான் பிறந்தது முதல் சுமார் 45 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகிறேன். 1996 ம் வருடம் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தபோது கருவலூரில் வசித்து வந்தேன் என்றால் நான் அங்கு குடியிருக்கவில்லை. எனது பெரியப்பா மகன் தான் கருவலூரில் குடியிருந்தார். பவர் ஆவணம் எழுதும்போது நான் உடன் இருந்தேனா என்றால் ஆமாம்.

2. பொது அதிகார ஆவணத்தில் இருகூர் கிராமம், அய்யனார் கோவில் வீதியில் குடியிருக்கும், என, எனக்கும் என் தகப்பனாருக்கும் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எங்களுடைய முகவரி அல்ல. அது எங்கள் பெரியப்பாவின் முகவரி ஆகும். பவர் ஆவணத்தை படித்து காட்டினார்களா என்றால் ஆமாம். அண்ணன், தம்பி முகவரி என்பதால் எதுவும் செய்யவில்லை. பவர் ஆவணத்தில் முகவரி மாற்றப்பட்டுள்ளதால் நானும், என் தகப்பனாரும் ஆவணம் எழுதும்போது அங்கு இல்லை என்றால் சரியல்ல, அங்கு தான் இருந்தோம்.

3. பவர் ஆவணம் ஏக்கர் 1.02 ½ சென்ட் விஸ்தீரணத்திற்கு எழுதப்பட்டது. க.ச.எண்.301/1 காலையில் ஏக்கர் 5.33 சென்ட் என்றும், அதில் தென்புற சரிபாதியை ஏக்கர் 2.66 ½ சென்ட்டில் எனது பாட்டனார் முத்துகுமாரசாமி தேவர் ஏக்கர் 1.02 ½ சென்ட் ஒதுக்கப்பட்டது என்றும், அது வா.சா.ஆ.1 ஆவணப்படி, ஏ-அட்டவணை சொத்து என்றால் சரிதான். மேற்படி முத்துகுமாரசாமி தேவர் இறந்த பின்னிட்டு அவரது மகன்கள் பழனியப்பன், ஆறுமுகத்தேவர் ஆளுக்கு பாதியாக பிரித்து கொண்டனர் என்றால் சரிதான். அதில் ஒவ்வொருவருக்கும் 51 ¼ சென்ட்

ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ. 2 பவர் ஆவணத்தில், 50 செண்ட் உள்ளது என்றால் சரிதான். 1 ¼ செண்ட் என்ன ஆனது அளவீடு செய்யும்போது 50 செண்ட் இருந்தது, மீதம் 1 ¼ செண்ட் கணக்கில் வரவில்லை. சயிட்டை சர்வேயர் வைத்து அளக்கும்போது நான் உடன் இருந்தேன். என் தாத்தாவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் செக்குபந்தி தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். சொத்தை அளந்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினையில் பி-அட்டவணை சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். மேற்படி பாகப்பிரிவினையில் சி-அட்டவணை சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும்.

5. 1956 பாகப்பிரிவினை பத்திரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் தெரியும். பொது அதிகார பத்திரத்திற்கு நாங்கள் அவரிடம் ரூ.65,000/- பெற்றுக்கொண்டு ரசீது எழுதி கொடுத்துள்ளோம் என பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எழுதிய ரசீது சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவானதா என்றால் பதிவானதா என்று எனக்கு தெரியவில்லை. பதிவாகவில்லை. அவ்வாறு பணம் பெற்றுக்கொண்டு ஆவணம் எழுதி வாங்கினால் அது ரசீதாக எழுத முடியாது என்றும், கிரய ஆவணமாக தான் எழுத முடியும் என்றால் பொது அதிகார ஆவணம் தான் கொடுத்தோம். கிரய ஆவணம் தெரியாது, ரசீது தான் எழுதி கொடுத்தோம். இரண்டும் ஒன்றாக தான் இருக்கும் என நினைத்துகொண்டேன்.

6. அவ்வாறு ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றும், ரசீது எழுதிகொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பின்னிட்டு பவர் ஆவணம் வாங்கிய பிறகு போஜராஜன் சில சொத்துக்களை கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். அசோக்குமார் விடுதலை ஆவணம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் காவல் நிலையத்தில் இருந்து அழைத்த போது தான் தெரிய வந்தது. நில அபகரிப்பு புகாருக்கு நானும், என் தகப்பனார், பிரதிவாதி

அசோக்குமார், பவர் ஏஜென்ட் போஜராஜன் ஆகியோர் சென்றோமா என்றால் ஆமாம். அந்த புகாரில் என்ன தீர்வு எட்டப்பட்டது என்றால் சமாதானமாக போய்கொள்வதாக எழுதப்பட்டது. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 ஆவணம் நான் எழுதியது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் நாங்களும், எங்களது பெரியப்பா குடும்பமும் சமாதானமாக சென்றுவிடுகிறோம் என்றும், விடுதலை பத்திரம் சம்மந்தமாக சிவில் வழக்கின் தீர்ப்பின் படி நடந்து கொள்கிறோம் என எழுதிகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆய்வாளர் சொல்லச்சொல்ல நான் எழுதினேன். அப்போது தீர்ப்பு ஏற்படவில்லை.

7. வா.சா.ஆ.7 அ.வ.எண்.94/2017 ல் தீர்ப்பாணையின் படி, என் தகப்பனார் போஜராஜனுக்கு கொடுத்த பவர் ஆவணத்தின் படி பழனியப்பன் வகையறா விற்பனை செய்த ஏக்கர் 0.51 ¼ பூமிக்கு கிழக்கு என்று தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே பழனியப்பன் பூமி மேல்புறமாக உள்ளது என்றும், எனது பெரியப்பா ஆறுமுகத்தேவரின் பூமி கிழபுறமாக உள்ளது என்று தீர்ப்பின் படி தெரியவருகிறது என்றால் என் பெரியப்பா உயிருடன் இருந்தபோது சொத்தை விற்பனை செய்துவிட்டார். மேற்படி தீர்ப்பின் விவரம் எனக்கு தெரியாது. தற்போது தான் தெரிய வருகிறது.

8. பவர் ஆவணத்தில் உள்ள செக்குபந்தி தவறானது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்பத்தார் போஜராஜனுக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் தேதி தெரியுமா என்றால் அக்டோபர் 1996 ஆகும். அக்டோபர் 1996 எழுதியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வா.சா-ஆ.6 ஆவணத்தின் படி, 2011 ம் ஆண்டில் தான் பிரதிவாதிக்கு அவர்கள் குடும்பத்தார் ஒரு விடுதலை ஆவணம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் தவறு. பிரதிவாதி குடும்பத்தார் போஜராஜனுக்கு பவர் ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதிக்குள் ஏற்பட்ட விடுதலை ஆவண எண்.4608/2011 ன் படி தீர்ப்பு பகரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சாட்சியாக வந்துள்ளதால் வாதிக்கு ஆதரவாக பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur